BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:111 **தேதி:-30.06.2016**

எழுச்சியுடன் நடைபெற்ற விருதுநகர் மாவட்ட மாநாடு

அன்பார்ந்த தோழர்களே,

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் BSNL ஊழியர் சங்க மாவட்ட மாநாடுகளின் வரிசையில் முதல் மாநாடாக விருது நகர் மாவட்ட 8ஆவது மாநாடு இந்தியாவின் குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசியில் ஜூன் மாதம்26 மற்றும் 29ஆம் தேதிகளில் வெகு விமரிசையாக நடைபெற்று முடிந்துள்ளது.

ஜூன் மாதம் 26ஆம் தேதி மாநாட்டின் பொருளாய்வுக் குழு நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் விருது நகர் மாவட்ட தலைவர் தோழர் A.சமுத்திரக்கனி மாநாட்டிற்கு தலைமை வகித்தார். BSNL ஊழியர் சங்கத்தின் மாநில அமைப்பு செயலாளர் தோழர் R.M.கிறிஸ்டோபர் பொருளாய்வுக் குழுவை துவக்கி வைத்து உரையாற்றினார். BSNL ஊழியர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட செயலாளர் தோழர் S.ரவீந்திரன் செயல்பாட்டு அறிக்கையினை சமர்ப்பித்து உரையாற்றினார். இந்த பிரதிநிதிகள் அமர்வில் பங்கேற்ற தோழர்கள் தங்களின் கருத்துக்களை விவாதங்களில் தெரிவித்த பின்னர் ஒரு சில திருத்தங்களுடன் செயல்பாட்டு அறிக்கை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட பொருளாளர் தோழர் S.வெங்கடப்பன் சமர்ப்பித்த வரவு செலவு அறிக்கையும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நிர்வாகிகள் தேர்வு என்கிற ஆய்படு பொருளை 29ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஜூன் 29ஆம் தேதி சுமார் 300க்கும் மேற்பட்ட தோழர்களின் பெருந்திரள் பங்கேற்புடன் மாநாடு மீண்டும் விண்ணதிரும் வெடிக்களுடன் துவங்கியது. தேசியக் கொடியினை மூத்த தோழர் V.ஸ்ரீனிவாசன் அவர்களும், மற்றொரு மூத்த தோழர் P.பொன்னுசாமி அவர்கள் நமது சங்க கொடியினையும் கோரிக்கை முழக்கங்களுக்கு இடையே ஏற்றி வைத்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட உதவி செயலாளர் தோழர் M.முத்துசாமி அஞ்சலி உரை நிகழ்த்திய பின் மாநாடு ஒரு நிமிடம் தியாகிகளுக்கு தனது அஞ்சலியை தெரிவித்தது.

BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் இந்த வெற்றி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். உலகமயமாக்கல் காரணமாக பிரிட்டனில் ஏறபட்டு வரும் நிகழ்ச்சிகளையும், 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் நமது சங்கம் பெற்றுள்ள பிரமாண்டமான வெற்றியை பற்றியும், ஊழியர்களின் கோரிக்கைகளில் இன்றைய நிலைமைகளையும், எதிர்காலத்தில் நாம் நடத்த உள்ள ஜூலை 5 மற்றும் ஜூலை 11 ஆர்ப்பாட்டம் மற்றும் செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் தொடர்பாகவும் விளக்கி பேசினார். 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் விருது நகர் மாவட்டம் முதன்மை சங்கம் என்ற நிலையிலிருந்து 50%க்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்ற மாவட்டமாக உயர்ந்துள்ளதற்கும், மாவட்ட சங்கத்தின் செயல்பாடுகளை பாராட்டியும் தனது துவக்க உரையில் கூறினார்.

BSNL ஊழியர் சங்கத்தின் உதவி மாநில செயலாளரும், BSNL WWCCயின் மாநில அமைப்பாளருமான தோழர் P.இந்திரா தனது சிறப்புரையில், பெண்கள் இன்று சமூகத்தில் நடத்தப்படும் விதம் தொடர்பாகவும், நமது சங்கத்தின் சாதனைகள் தொடர்பாகவும், BSNL ஊழியர் சங்கம் இன்று BSNLஐ காப்பாற்ற எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும், விருது நகர் மாவட்டத்தில் பெண் தோழர்களின் சிறப்பான பங்களிப்பு தொடர்பாகவும் மிக விளக்கமாக தெரிவித்தார்.

AIBDPA சங்கத்தின் மாவட்ட செயலாளர் அருமை தோழர் Mஅய்யாசாமி, TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் P.ராமச்சந்திரன், தோழர் S.செந்தில்குமார் DS SNEA, தோழர் A.நாராயணன் DP AIBSNLEA, SEWA சங்கத்தை சார்ந்த தோழர் V.பரமேஸ்வரன், SNATTA சங்கத்தின் மாநில பொருளாளர் தோழர் கேசவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த மாவட்ட மாநாட்டில் TNTCWU மாவட்ட சங்கத்தின் பொருளாதார சிக்கலை கணக்கில் கொண்டு நிதி வசூலிக்கப்பட்டது. வந்திருந்த சார்பாளர்கள் TNTCWU மாவட்ட சங்கத்திற்கு ரூ.4,124/- நன்கொடையாக வழங்கினார்கள்.

சிவகாசியை சார்ந்த தோழர் கருப்பையா TM அவர்கள் தூத்துக்குடி விரிவடைந்த மாநில செயற்குழுவில் உறுதி அளித்த படி மத்திய சங்கத்திற்கு தென்னாப்ரிக்காவில் நடைபெற உள்ள WFTU மாநாட்டு நிதியாக ரூ.3,000/-ஐ மாநில செயலாளரிடம் வழங்கினார்.

விருது நகர் மாவட்ட பொது மேலாளர் அலுவலக கிளையின் தலைவராக உள்ள தோழர் N.மங்கையர்கரசி அகில இந்திய மாநாட்டிற்கு தனது பங்களிப்பாக ரூ.26,000/- ரூபாயை நன்கொடையாக வழங்குவதாக அனைவரின் பாராட்டுக்கிடையே தெரிவித்தார்.

அகில இந்திய மாநாட்டிற்கான நிதியில் முதல் தவணையாக விருதுநகர் மாவட்ட சங்கம் ரூ.1,80,000/- ரூபாய்களை தமிழ் மாநில செயலாளரிடம் வழங்கியது விருதுநகர் மாவட்ட சங்கத்தின் துடிப்பான செயல்பாட்டை விளக்கும் வண்ணம் இருந்தது.

செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் முழுமையாக வெற்றிபெற செய்வது உள்ளிட்ட 5 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் கீழ்கண்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட தலைவர்	**: தோழர் A.சமுத்திரக்கனி TT சிவகாசி**
மாவட்ட உதவி தலைவர்கள்	: தோழர் R.C.ராஜாராம் TT சிவகாசி
	: தோழர் G.ராஜு TT சிவகாசி
	: தோழர் G.வெங்கடசாமி TT ஸ்ரீவில்லிபுத்தூர்
	: தோழர் T.அனவரதம் TT ராஜபாளையம்
மாவட்ட செயலாளர்	**: தோழர் S.ரவீந்திரன் OS விருதுநகர்.**
மாவட்ட உதவி செயலர்கள்	: தோழர் S.வெங்கடப்பன் TT விருதுநகர்
	: தோழர் R.ஜெயகுமார் JE விருதுநகர்
	: தோழர் L.தங்கதுரை JE வத்திராய்ப்பு
	: தோழர் A.S.அஷ்ரப் தீன் JE அருப்புக் கோட்டை
மாவட்ட பொருளாளர்	**: தோழர் C.சந்திரசேகரன் TT விருதுநகர்**
மாவட்ட உதவி பொருளாளர்	: தோழர் N.மங்கையர்கரசி OS விருதுநகர்
மாவட்ட அமைப்பு செயலாளர்கள்	: தோழர் I.முருகன் TT ராஜபாளையம்
	: தோழர் T.கணேசமூர்த்தி JE காரியாப்பட்டி
	: தோழர் N.ராதாகிருஷ்ணன் TT ராஜபாளையம்
	: தோழர் H.காதர் மைதீன் TT சாத்தூர்
	: தோழர் G.சண்முகவேலு TT சிவகாசி
	: தோழர் R.ராஜமாணிக்கம் TT சிவகாசி
	: தோழர் R.முனியாண்டி TT சிவகாசி

எழுச்சியுடன் நடைபெற்ற விருதுநகர் மாவட்ட மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாவட்ட சங்க நிர்வாகிகளையும், தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது. இந்த மாவட்ட மாநாட்டிற்கான ஏற்பாடுகளை வரவேற்புக்குழுவின் செயலாளர் தோழர் A.ஜெயபாண்டியன் தலைமையிலான குழுவினர் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். அனைவருக்கும் பாராட்டுக்கள்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்